# ஆழம்

மலர் 3 • இதழ் 10 • நவம்பர் 2014

விலை ரூ. 25 • ஆண்டுச் சந்தா ரூ. 200



குற்றமும் தண்டனையும்

# சட்டம் என்ன சொல்கிறது?

**கீ. கிருஷ்ணமூர்த்தி, சட்டக் கல்வியில் இளங்கலை பட்டமும், காவல்துறை நிர்வாகக் கல்வியில் முதுகலைப் பட்டமும் பெற்றவர். சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞராகப் பணியாற்றுகிறார். பல்வேறு சட்ட வழக்குகளைக் கையாளும் இவர் பல தொழில் நிறுவனங்களுக்கும், வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கும் சட்ட ஆலோசகராக உள்ளார். தனியார் தொலைக்காட்சியில் சட்டம் தொடர்பான நிகழ்ச்சிகளை இணைந்து நடத்தியுள்ளது மட்டுமல்லாமல் லாயர்ஸ் லைன் மாத இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வருகிறார். ஜெயலலிதாவின் கைது, பதவியிழப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள சில பொதுவான சந்தேகங்களை அவரிடம் பகிர்ந்துகொண்டோம். ஆழம் இதழுக்காக அவர் மேற்கொண்ட உரையாடலில் இருந்து சில பகுதிகள் கீழே.**

***ஒருவர் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டால் அவருக்கான தண்டனை உடனே முடிவாகி விடுமா? எப்போது அது அமல்படுத்தப்படும்?***

ஒரு வழக்கு, வழக்காடு மன்றத்தில் பல்வேறு நிலைகளைக் கடந்தபிறகு இறுதியாக நீதியரசர் தன் தீர்ப்பை வழங்குகிறார். விசாரணை அறிக்கைகள், சாட்சியங்களின் வாக்குமூலங்கள் உள்பட அனைத்து ஆவணங்களையும் ஆய்வு செய்தபிறகு குற்றம்சாட்டப்பட்டவர் குற்றவாளியா, குற்றமற்றவரா என்பதை நீதிபதி அறிவிப்பார். அதன் பின்னர் செய்த குற்றத்துக்கு ஏற்ப குற்றவாளிக்குத் தண்டனை அறிவிக்கப்படும். திருட்டு போன்ற சிறிய குற்றங்களுக்கு 6 மாதம் முதல் ஒரு வருட தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும். கொலை, கொள்ளை போன்ற வழக்குகளுக்கு 14 வருடம் முதல் மரண தண்டனையும், வேறு சில வழக்குகளில் 1 முதல் 7 வருட சிறைத் தண்டனையும் அளிக்கப்படுகிறது. குற்றவாளி அடைந்த ஆதாயத்துக்கு ஏற்ப அபராதமும் விதிக்கப்படும். தீர்ப்புக்குப் பிறகு தண்டனை என்பது உடனேயோ அன்றைய பொழுதுக் குள்ளோ அல்லது மறு நாளோ அல்லது சில நாள்களிலோ அறிவிக் கப்படவேண்டும்.

தீர்ப்பின் சாராம்சம் ஆபரேஷன் போர்ஷன் என்று அழைக்கப்படுகிறது. உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப் படையிலும், வழக்கின் பல்வேறு ஆவணங்கள், ஆதாரங்கள், அறிக்கைகள் போன்றவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து ஒருவர் குற்றவாளியா இல்லையா என்பதை நீதியரசர் தெளிவாக்கும் முக்கிய மான பகுதி இது.

***நீதிபதியின் தீர்ப்பை சம்பந்தப்பட்டவர் ஏற்க மறுக்கலாமா?***



மேல் முறையீடு செய்யலாம். அதற்கான வாய்ப்புகள் சட்டத்தில் தெளிவாக உள்ளன. அளிக்கப்பட்டுள்ள தீர்ப்புக்கோ அல்லது உத்தரவுக்கோ எதிராக நிவாரணம் கோரி மேல்முறையீடு செய்யலாம். ஒருவேளை மனு நிலுவையில் உள்ள காலத்தில் தண்டனை உத்தரவு செயல்படுத்தப்பட்டால், மேல்முறையீடு நீதிமன்றம் அந்தத் தீர்ப்பையோ அல்லது உத்தரவையோ தேவைப்பட்டால் நிறுத்தி வைக்கும். குற்றம் சாட்டப்பட்டவர் சிறையில் இருந்தால் அவரை ஜாமினில் விடுவிக்க உத்தரவும் பிறப்பிக்கும். செட்டிங் அஸைட் தி ஜட்ஜ்மெண்ட் என்று இதனைச் சொல்வார்கள்.

ஒருவருக்குச் சில ஆண்டுகள் சிறை தண்டனையோ ஆயுள் தண்டனையோ அபராதமோ விதிக்கப்பட்டால், அவர் கீழ்கோர்ட்டில் தமது வழக்கு தவறாக புரிந்துக்கொள்ளப்பட்டு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று முறையிடலாம். தனக்களிக்கப்பட்ட தீர்ப்புக்கு விலக்கு அளிக்கவோ அல்லது இடை நிறுத்தம் செய்யவோ அதன்மூலம் பிணை அளிக்க வேண்டியோ முறையிடலாம். மேலும் குற்றவாளிகளாக அறிவிக்கப்படும் சிறுவர்கள், பெண்கள், ஆரோக்கிய மற்றவர்கள், துணையில்லாமல் வாழ முடியாதவர்கள், வயது முதிர்ந்தவர்கள் போன்றோரும் மேல் முறையீட்டில் இந்தப் பிரிவின் கீழ் தண்டனை விலக்கோ அல்லது இடைக்கால நிவாரணமோ பெற முடியும்.

**முன் ஜாமீன், ஜாமீன் எப்போது, எப்படி வழங்கப்படுகிறது?**


அரசியல் சாசன சட்டப்பிரிவு 21 தனிப்பட்டவரின் உரிமை அல்லது வாழ்வுரிமையை ஆதாரமாகக் கொண்டது. முன் ஜாமீன் என்பது சட்டப்பிரிவு 438ன் கீழ் வருவதாகும். ஒருவர்மீது ஜாமீனில் வெளிவர இயலாத பிரிவில் பொய்யான புகார் ஒன்று அளிக்கப்பட்டிருந்து, கைது செய்யப்படுவோம் என்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டால், செஷன்ஸ் அல்லது உயர் நீதிமன்றத்தை அணுகலாம். அந்த நீதிமன்றம், மனு தகுதியானது என்று உணர்ந்தால் கைது செய்யும் நிலை ஏற்படும்போது ஜாமீனில் விடிவுக்கும்படியான உத்தரவு ஒன்றை அளிக்கலாம். கைது செய்யப்படும் சூழ்நிலையில் மட்டுமே அத்தகைய உத்தரவு செயல்படும்.

ஒருவர் கீழ் கோர்ட்டில் குற்றம் சாட்டப்பட்டு அதனால் சிறை செல்ல நேரிடும்போது தண்டனை அறிவிக்கப்பட்டபோதே மனு கொடுப்பதற்கு வழிவகை இருக்கிறது. தண்டனை என்பது 3 ஆண்டுகளுக்குக் குறைவாக இருந்தால் கீழ் கோர்ட்டிலேயே உடனடியாக ஜாமீன் வழங்குவதற்கு வாய்ப்பு உண்டு. தண்டனை 3 ஆண்டுகளுக்கு அதிகமாக இருக்கும் பட்சத்தில் செஷன்ஸ் கோர்ட், உயர் நீதிமன்றம், உச்ச நீதி மன்றம் என்னும் வரிசைப்படி ஜாமீன் வேண்டி ஒருவர் மேல்முறையீடு செய்யலாம். வழக்கின் தன்மையையும் அளிக்கப்பபட்டுள்ள தண்டனையின் அளவையும் குற்றவாளியின் நிலைமையையும் கருத்தில் கொண்டு மேல்முறையீட்டில் ஜாமீன் வழங்கப்படும். சில சிக்கலான வழக்குகளில் ஜாமீன் தாமதமும் ஆகலாம் அல்லது வழங்கப்படாமலும் போகலாம்.

**ஜாமீன் வழங்கும்போது செல்வாக்கு உள்ளவர்களுக்கு சலுகைகளோ, விதிவிலக்குகளோ அளிக்கப்படுமா?**

**சிறையில் விஐபி, விவிஐபி பிரிவுகள் எதற்காக வைக்கப்பட்டுள்ளன? அங்குள்ள வசதிகள் என்னென்ன?**

இது அரசியல் சாசன சட்டப்பிரிவு 14ஐ ஆதாரமாகக் கொண்டது. சட்டத்துக்கு முன்பு அனைவரும் சமம் என்பதுதான் உண்மை. அந்தஸ்து போன்ற அளவுகோல் கொண்டு எதுவும் நடப்பதில்லை. குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டால் சட்ட அளவுகோலும் பிரிவுகளும் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும். சாதாரண குற்றவாளிக்கும் செல்வாக்கு மிக்கவர்களுக்கும் அதே சட்டம்தான் பொருந்தும். உடல் நிலை, மனநிலை பாதிக்கப்பட்டிருந்தால் அது கணக்கில் கொள்ளப்படும். சிறைச்சாலை விதிகளும் ஒன்றேதான். அங்கும் விஜபி அல்லது விவிஜபி என்ற பிரிவுகள் எதுவும் இல்லை. சிலருக்குச் சிறையில் ஏஸி, படுக்கை, வசதிகள் கிடைக்கும் என்ற பொதுவான ஒரு கருத்து உண்டு. மனித நேய அடிப்படையில் உடல் நலம், மன நலம் போன்ற சுகவீனங்கள்மீது மட்டுமே கவனம் செலுத்தப்படும். கைதிகளில் சிலர் அமைதிக்கு அச்சுறுத்தலாக இருக்கும் நிலை ஏற்பட்டால் அவர்களைத் தனித்து வைப்பார்கள். பிரபலங்கள் மற்றும் விஜபி அல்லது விவிஜபி என்று நீங்கள் கருதுபவர்களுக்கு உடல் நலம், பாதுகாப்பு காரணம் கருதி அவர்களுக்குத் தனி அறையை சிறை நிர்வாகம் ஒதுக்கலாம். அவர்களுக்கு அன்றைய நாளிதழ்கள், புத்தகங்கள் போன்றவை அனுமதிக்கப்படும். அதை தவிர வேறு வசதிகள் ஏதும் கொடுக்கப்படமாட்டாது. சலுகை விதிகள் என்று எதுவும் இல்லை.



**பிரபலங்கள் மற்றும் விஜபி அல்லது விவிஜபி என்று நீங்கள் கருதுபவர்களுக்கு உடல் நலம், பாதுகாப்பு காரணம் கருதி அவர்களுக்குத் தனி அறையை சிறை நிர்வாகம் ஒதுக்கலாம்.**

**அரசுத் தரப்பு வழக்கறிஞர்களின் பணி என்ன? அவர்கள் எந்தெந்த வழக்குகளில் ஆஜராவார்கள்?**

அரசுத் தரப்பு வழக்கறிஞர் என்பவர் அட்டார்னி ஜெனரலுக்குக் கீழ் பணிபுரிபவர். இவர்களும் தனி நபர் வழக்கறிஞர் போலவே செயல்படவேண்டும். முதல் தகவல் அறிக்கை பதிவது, சாட்சியங்களை முறைப்படுத்துவது, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வது, விசாரணையை ஏற்று நடத்துவது, அதன் மூலம் சரியான நீதி கிடைக்க வழிசெய்வது ஆகியவை அவருடைய பணிகள். காவல் துறை வழக்குகள், அரசு வழக்குகள், இரு அரசுகளுக்கு இடையேயான வழக்குகள், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள துறைகளின் வழக்குகள் அனைத்தும் இவர்களுக்கு உட்பட்டவை. நாட்டில் பொது மக்களுக்கு எதிரான குற்றங்களைப் புரிபவர்களிடம் இருந்து சமூகத்தைப் பாதுகாப்பது இவர்களுடைய பொறுப்பாகும். அதாவது நமது உரிமைகளையும் சுதந்தரத்தையும் பாதுகாத்து குற்றம் இழைத்தவர்களுக்கு இவர்கள் தண்டனை பெற்றுத் தரவேண்டும்.


**சொத்துக் குவிப்பு என்றால் என்ன? உச்ச வரம்பு ஏதேனும் உண்டா?**

ஒரு தனி நபர் அல்லது குடும்பத்தினர் ஈட்டும் தனி நபர் மற்றும் தொழில் ரீதியான வருமானம், செலவினங்கள் ஆகியவற்றைச் சரிபார்த்து வருமான வரி கட்டி, மீதம் இருப்பதைக் கொண்டு சேமிக்கும் அசையும், அசையாத சொத்துகளை முறைப்படி வருமான வரித் துறைக்கு கணக்குச் சமர்ப்பிக்கவேண்டும். இதுதான் நடைமுறை. பொது வாழ்வில் ஈடுபடும் பிரபலங்கள், அரசு அதிகாரிகள் ஆகியோருக்கும் இது பொருந்தும். அவர்களும் முறைப்படி கணக்கு வழக்குகளை பராமரிக்க வேண்டும். தகுந்த ஆவணங்களுடன் நேர்வழியில் முறைப்படி அடைந்த வருவாயின் வழி ஈட்டப்படுவதே சட்டப்படியான சொத்து. இதற்கு உச்ச வரம்பு என்று ஏதும் கிடையாது.

**சொத்துக் குவிப்பு வழக்குக்காக சிறைத் தண்டனை, பதவி இழப்பு, அபராதம் ஆகியவை கொடுக்கப்படுவது அதிகம் இல்லையா?**

சொத்துக் குவிப்பு வழக்கு சட்டப் பிரிவின்கீழ்

குற்றத்தின் தன்மையை மனத்தில் கொண்டு அதற்கான குறைந்தபட்ச தண்டனை, அதிகபட்ச தண்டனை, அபராதம் ஆகியவை தீர்மானிக் கப்படுகின்றன. குற்றமிழைத்தவர் பொது ஊழியராக இருந்தால் அவர் பதவியையும் இழக்கவேண்டும் என்று சட்டம் சொல்கிறது. தவறான வழியில் சொத்து சேர்ப்பவர்களுக்கு, கடுமையான தீர்ப்புகள் அச்சத்தை அளிக்கும். அதனால் நேர்மையான சமூகம் உருவாகும் என்பதே இதன் நோக்கம். ஆகவே கொடுக்கப்படும் தண்டனை சட்டப்படி அதிகமானது அல்ல. இந்த பிரிவில் 1 முதல் 7 வருடம் வரை சிறை தண்டனையும், ஈட்டப்பட்ட சொத்தின் அளவை வைத்து இழப்புக்கான அபராதமும், அரசியலில் இருப்பவர்களுக்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மூலமாக ஏற்பட்ட அரசியல் சாசன சட்டப் பிரிவின்படி பதவி இழப்பும் தண்டனையாக வழங்கப் படுகிறது. இது நியாய மானதுதான்.



**பெரும்பாலான பிரபலங் களின் வழக்குகள் வேறு மாநிலத்துக்கு மாற்றப் படுகின்றன. ஏன்?**

சிஆர்பிசி 406 பிரிவின்படி உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலில் மட்டும் இப்படி வழக்குகள் மாற்றப்படும். குறிப்பிட்ட மாநிலம் குற்றம் சாட்டப்பட்டவரின் பிறந்த இடமாகவோ செல்வாக்கு மிக்க இடமாகவோ (நீண்ட காலம் வாழ்ந்து பண பலம், அதிகாரிகளோடு நெருக்கம் ஆகியவற்றைக் கொண்டிருப்பது) இருந்தால் சம்பந்தப்பட்டவரால் சாட்சிகளைக் கலைக்கமுடியும், ஆதாரங்களை அழிக்கமுடியும் என்று அனுமானிக்க வாய்ப்பு உள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்களில்தான் இப்படிப்பட்ட மாற்றங்கள் நிகழும். அப்படி வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்றிவிட்டால் அந்த வழக்கை நடத்துவது மாற்றப்பட்ட மாநிலத்தின் நீதிமன்றப் பொறுப்பாகிறது. நீதிமன்றத்துக்குத் தேவையான ஒத்துழைப்பை அரசு கொடுக்கவேண்டும். பாதுகாப்பு போன்ற விஷயங்களை அரசு கவனித்துக்கொள்ள வேண்டும்.

**தவறான வழியில் சொத்து சேர்ப்பவர்களுக்கு, கடுமையான தீர்ப்புகள் அச்சத்தை அளிக்கும். அதனால் நேர்மையான சமூகம் உருவாகும் என்பதே இதன் நோக்கம்.**

**மாநிலம் விட்டு மாநிலம் மாறும் வழக்குகள் அரசியல் ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துமா?**

குற்றம் சாட்டப்பட்டவர் அரசியல் செல்வாக்கு உள்ளவராக இருந்தால் சில சமயங்களில் சம்பந்தப் பட்ட அரசுக்கும் குற்றம் சாட்டப்பட்டவருக்கும் பரஸ்பர சகாயம் இருக்க வாய்ப்பு உண்டு. அவை நீதிமன்றத்தையோ நீதிபதியையோ அல்லது தீர்ப் பையோ பாதிக்காது, அதற்கு அவசியமும் இல்லை.

**ஒரு முறை மாற்றப்பட்ட வழக்கை மீண்டும் வேறு மாநிலத்துக்கு மாற்றச் சொல்லி பாதிக்கப் படுபவர் மனு அளிக்க முடியுமா?**

விசாரணை அதிகாரியோ, நீதியரசரோ புகார் கொடுப்பவரின் சொந்த மாகவோ தெரிந்த வராகவோ, நண்ப ராகவோ இருப்பதாகக் குற்றம் சாட்டப் பட்டவருக்குத் தெரிய வந்தால், அவர்கள் விசாரித்தால் சரியான தீர்வு கிடைக்காது என அதிகாரியை மாற்றச் சொல்லி முறையீடு செய்யலாம். அவ்வாறான முறையீட்டைப் பரிசீலித்து உண்மை இருந்தால் குற்றம் சாட்டப்பட்டவருக்குச் சாதகமாக உத்தரவு பிறப்பிக்கப்படும்.

**உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானது என்றால் பிற நீதிமன்றங்களின் தீர்ப்பு இறுதியானதல்ல என்று அர்த்தமாகுமா? ஒரே வழக்குக்கு இரண்டு நீதிமன்றங்கள் இரண்டு விதமான தீர்ப்புகளை வழங்க என்ன காரணம்?**

கீழ் கோர்ட்டில் முதல் தகவல் அறிக்கை, விசாரணை அதிகாரியின் அறிக்கை, சில சமயங்களில் மாஜிஸ்ட்ரேட்டின் விசாரணை அறிக்கை, குற்றப் பத்திரிகை, வழக்கு விசாரணை இவை எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து (பேலன்ஸ் ஆஃப் கன்வீனியன்ஸ்) குற்றம் செய்ததற்கான முகாந்திரம் இருப்பதாக உணர்ந்தால் அதற்கான தீர்ப்பு எழுதப்படுகிறது. ஆனால் இந்தத் தீர்ப்பு சரியானதல்ல என்று சிலர்

கருதலாம். ஆதாரங்கள் ஒன்றுக்கொன்று முரணாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ, தவறான தகவல்கள் அளிக்கப்பட்டிருந்தாலோ அல்லது தற்காப்பு காரணமாக நிகழ்ந்த தவறுகள் குற்றமாகச் சித்தரிக்கப்பட்டிருந்தாலோ தமக்கு நீதி கிடைக்கவில்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் கருதக்கூடும்.

அத்தகைய சந்தர்ப்பங்களில் மேல் முறையீடுக்குச் செல்கிறார்கள். மேற்படி குறைபாடுகளை நிரூபித்து நிவாரணம் பெறுகிறார்கள். தீர்ப்பு மாற்றம் பெறுகிறது. கீழ் கோர்ட்டுகள் விசாரணையையும், ஆதாரங்களையும் வைத்து வழக்கை முடிக்கும். மேல் கோர்ட்டுகள் *'question of law and question of facts'* என்பதை வைத்து தீர்ப்பு வழங்கும். இதனைத்தான் வெவ்வேறு நீதிமன்றங்கள் வெவ்வேறு தீர்ப்புகளை வழங்குகின்றன என்று மக்கள் நினைக்கிறார்கள். அப்படித் தோன்றினாலும் அடிப்படையில் சட்டம் ஒன்றுதான்.

**லோக் ஆயுக்தா மன்றங்கள் மூலமாக முக்கியமான அல்லது சிக்கலான வழக்குகளை விரைவாகவும் சிறந்த முறையிலும் முடித்துவைக்க முடியுமா?**

1966ம் ஆண்டு மொரார்ஜி தேசாய் அமைத்த நிர்வாகச் சீரமைப்புக் கமிஷன், மத்தியில் லோக்பால் அமைப்பையும் மாநிலங்களில் லோக் ஆயக்தா அமைப்பையும் பரிந்துரைத்தது. லோக்பால் அமைப்பு இதுவரை அமையவில்லை. சமீப காலத்தில் லோக் ஆயுக்தா அமைப்பு ஒரு சில மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு மாநிலத்திலும் இதன் அமைப்பு விதிகள் மாறுகிறது. இதன்மூலம் நாட்டின் எந்தக் குடிமகனும் அரசு அதிகாரிகள் மீதோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மீதோ, சில மாநிலங்களில் முதல் மந்திரி, எம். எல்.ஏக்கள் மீதோ புகார் அளிக்கலாம். அப்படிப்பட்ட புகார் சீரிய முறையில் விசாரித்து நீதி வழங்கப்படும்.

அதே சமயம், குற்றவாளியை வரவழைக்கக் குற்றவியல் நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்படும் நடைமுறையை எடுக்க லோக் ஆயுக்தாவுக்கு அதிகாரம் இல்லை. அது மட்டுமல்லாமல், ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற அல்லது உச்ச நீதிமன்ற நீதியரசர்களை மத்திய அரசு நியமனம் செய்கிறது. எனவே இதை நீதிமன்றம் என்றும் சொல்லமுடியாது. இதன் வட்டத்துக்குள் எல்லா வழக்குகளையும் கொண்டு வருவதற்கு வாய்ப்பும் இல்லை. ●


ALL COLLECTIONS AVAILABLE
IN ONLY ONE SHOP

VIJAY
BOOKS AND MUSIC CENTER

books on
- Biography
- Stories
- History
- Health
- Motivation
- Cookery
- School Guides
- Literature Science
- Politics
- General knowledge

CDs
DVDs
MP-3

87A North Andar Street, Trichy - 620 002
Ph: 0431-2706896, Mob: 8903906896
கிழக்கு பதிப்பகத்தின் அனைத்து புத்தகங்களும் கிடைக்கும்.